
# என் விரல்களின் தவம்




- தஷந்தி சங்கர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஷந்தி சங்கர்

# என்
# விரல்களின்
# தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என் உயிர் செய்த தவத்தால்
தமிழ் உடல் கொண்டேன்
உடல் செய்த தவத்தால்,
எழுதும் என் விரல் பெற்றேன்.
இன்று
என் விரல்களின் தவத்தால்,
உயிர் நிறைந்த தமிழ்தாயின்
உன்னத உடல் மீது,
சின்னதாய் என் ரேகைகள்
பதிக்கின்றேன்.

என் எண்ண வெளிப்பாடுகளைச் சொற்களுக்குள் சிறைப் பிடித்து, சுவைச் சிறகுகளுக்குச் சேதமில்லாமல் சேர்த்து வைத்திருக்கின்றேன். வாசித்துச் சிறைமீட்டுக் கூட்டிச் செல்லுங்கள். என் கற்பனை வரிகளுக்கு நானே விளக்க விலங்கு பூட்ட விரும்பவில்லை. ரசிப்பதும், விமர்சிப்பதும் உங்கள் மன வானத்துக்குச் சொந்தமானவை.

தேடிக்கிடைத்த சில அற்புதப் படங்களை சேர்த்திருக்கின்றேன். முற்றுப்பெற்ற பின் படங்களுக்கு வரிகளா, வரிகளுக்காய் படங்களா என எனக்கே திகைப்பு வந்துவிட்டது. சுய விளக்கமாய் பல அர்த்தங் காட்டும் இந்தப் புகைச் சித்திரங்கள், உங்கள் ரசனைக்கு விருந்தாகும் என நம்புகின்றேன்.

பல உயர்ந்த மலைத்தொடர்களுக்கு மத்தியில் மனித விரல் வடிவத் தோற்றம் கொண்ட மலைகள், என் அட்டைப்படத்தில் உள்ள விரல்கள் எந்தவித நட்ப மாற்றங்களுமற்ற அப்பழுக்கற்ற இயற்கையின் தோற்றம். இணையத்தளமொன்றில் கண்டெடுத்த இணையற்ற இப் புகைப்படம் என் நூலுக்குக் கிடைத்த முதல் வரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இரசனையை, தமிழ் மனித இயற்கை உணர்வுகளை மேம்படுத்திய அனைவருக்கும், அனைத்திற்கும் "நன்றி" என உயிர் தொட்டுக் கூறுகின்றேன்.

என் தவத்திற்கு உதவிய அனைவரோடும் நன்றி பொங்கக் கை குலுக்கிக் கொள்கின்றேன்.

"என் திருமண நாளில் வெளிவரும் இந்நூல்... என் விரல்களின் கனவு"

"என் முதல் கவிதைத் தொகுப்பை சமர்ப்பிக்கும் இந்நேரம் குறையிருந்தால் மன்னிக்குமாறு கேட்பது என் விரல்களின் வேண்டுகோள்"

கரம் சேர்ந்த கவிதைகளில்,
மனங் கவர்ந்த சில வரிகள்
நிரந்தரமாய் இடம் பிடித்தால்,
சிரம் தாழ்த்தி விரல் சொன்ன
சில கருத்தும், மன வேரில் ஆழமாய்
சேர்ந்து விட்டால்
அதுவே....... என் விரல் பெறும்
வரம்.

— தஷந்தி சங்கர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

மென்மையான உணர்வுகளை வன்மையாகவும், கடினமான உணர்வுகளை மென்மையாகவும் காட்டும் வல்லமை கவிஞர்களுக்கு உரிய இலட்சணம்.

தஷந்தி சங்கரின் வழித்தடங்களை பார்க்கும்போது அவரது வழித்தடங்களைக் கூட தடங்களாகப் பதிவு செய்யும் தகைமை சார் புலமையை காண முடிகிறது.

காலத்தை பிரதிபலிக்கும் கருப்பொருள்
ஞாலத்தை நேசிக்கும் உள்ளம்
நேர்த்திக்கு பங்கமில்லாத சொற்களின் கை ஆழுகை அனைத்தையும்
சிறப்பாகச் செய்கிறது கவிதை வேண்டி இவரது விரல்களின் தவம்.

என் பார்வைக்கு கிடைத்த ஒரு சில கவிதைகளில் இருந்து......

உள்ளுக்குள்ளே அடைந்து போயிருக்கும் அழுக்குகளை வெளுக்கிறது உனக்குள் நீ எனும் கவிதை.

புதைந்து போன வன்மங்கள்
அழுகிய பொறாமைகள்
உக்கி அழுக்கான மனக்கிணற்றின்
தூர் வாரிய கடைசிநாள்
எப்போது...........?

ஆழமான கேள்வி அழுத்தமான பதிவுகளாகிறது. அடிமனத்துக்குள் அழுக்குகளை ஒளித்து வைத்துக்கொண்டு வெளிப்புறத்துக்கு மெழுகி பூசியிருக்கும் உண்மையை பிரதிபலிக்கிறது இக்கவிதை.

இன்னும் கூட புதுக்கவிதைகளை சில இலக்கியப் பெருந்தகைகள் திட்டித் தீர்த்துக் கொண்டும் அந்தக் கவிதை மொட்டுகளை வெட்டிக் காயப்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். அவ்வாறு இருப்பவர்களை நோக்கி வடிவ அழகோடும் சந்தங்கள் சேர்ந்து கொள்ளவும், புதுக்கவிதையிலும் எழுதிட முடிகிறது என்பதை "நீயும் மழைதானே?" என்னும் கவிதையில் காணமுடிகிறது.

"விதியிடம் கொண்ட ஒப்பந்த நியதியில்
வதிவிடம் தேடி நகர்க்கடல் வந்தாய்
சதியிடம் பெறும் உவர்நகர் கடலினில்
மதிகெட்டலைகளில் மயங்கியே உழன்றாய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிப் பந்தெங்கும் அலையும் மழைத்துளியைப் போலவே புலம்பெயர்ந்த நிலையில் நம் உறவுகள் என ஒப்பீடு செய்து இவர்களுக்காகவும் இரங்குகிறது இவர் உள்ளம்.
இப்படித்தான்
இப்படித்தான்
சின்ன வயதிலே பூக்களுக்காக கொய்த மொட்டுக்களை நினைத்தும் தான் அறியாமல் தான் பட்டாடை அணிய வதைக்கப்பட்ட பூச்சிகளுக்காகவும் இவர் கண்கள் கண்ணீரை கொட்டுகிறது. மன்னிக்குமா? என்ற கவிதையில் அவரது ஈரமனசை இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்.

உள்ளூர் தமிழனுக்காக மட்டுமல்ல எதியோப்பிய மனிதனுக்காகவும் இவரது எழுதுகருவி மை நீர் பொசிந்து கண்ணீர் மல்குவதை "உணவுச் சங்கிலி" எனும் கவிதையில் தரிசிக்கலாம்.

"மறந்து போன என் பசியை
மரத்துப் போன என்
குடலை
சுமந்து செல்கிறேன்
நிறுத்தாதே
என்னை,
இன்றேனும் என் களத்தில்
இரு கவளம் உணவு விழ வேண்டும்
இறுதி ஆசை இது"

என பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழாகிய சிறுவனின் நிலைகண்டு உருகுகிறார்.

இப்படியே காதலையும் கண்ணீரையும் வீழ்ந்து கிடக்கும் மனிதரின் வெந்நீரையும் இயற்கையோடு, ஏழைத் தொழிலாளியின் வியர்வை என்று எல்லாவற்றையும் பாடுகிறார் இவர்.


தஷந்தி சங்கர், கவிதை உலகிற்கு தனது கன்னிப் பயணத்தை ஆரம்பிக்கும் தருணத்தில் இவரது தமிழ் சிறக்கவும் கவிதைப் பறவை சிறகடித்துப் பறக்கவும் வாழ்த்துக்கள் கூறுகிறேன்.

**நட்புடன்**
**கவிஞர் மட்டுவில் ஞானக்குமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த நிமிடங்கள்



தொட்டியில் பூத்த பூ
வாடி விழும் முன்
வருடி அதை முகர்ந்து
மகரந்தம் ஒட்டிய
மூக்கின் முனை தடவி
ஒரு நிமிடம் கண்மூடி
எனை மறக்க நேரமில்லை!

கொட்டும் மழை நேரம்
தேநீர் கதகதப்பில்
கொஞ்சமாய் திறந்திருக்கும்
கூடத்து யன்னலூடாய்
குளிக்கும் தெரு மரத்தில்
நனையாத குயில் பார்த்து
குளிரில் வெட வெடத்து
சிலிர்க்க நேரமில்லை!

கூட்டாய் உணர்வுகளை
சுமக்கும் உடல் சுவைக்க
உப்புக்காற்று சேர்வதற்கு
சிகை கலையும் கடற்கரையில்,
விரல்புதைய மணம் மிதக்க
கவலைவிற்று அலை வாங்கி
கடலைப் பார்த்து கடலை மென்று
பாறை மோதும் அலை கண்டு
சினம் சிதற நேரமில்லை!

வண்ணப் பொருள் விற்கும்
கண்ணாடிக் கடை சென்று
என்ன வாங்குவது
என்றெல்லாம் இலக்கின்றி
கதவடைக்கும் நேரம் வரை
கடைசுற்றி நடை நடந்து
எண்ணியது இதுவென
ஏதோ ஒரு பொருள் வாங்கி
சின்ன திருப்தி கொண்டு
புன்னகைக்க நேரமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழந்த நிமிடங்கள்

முற்றத்து புற்தரையில்
முகம் நிமிர்த்தி உடல் தளர்த்தி
முழு நிலவு முன்தலையில்
முத்தமிடும் விழிப்பரப்பில்
கைவிரித்து தாரகையை
பற்றித் திருப்புகையில்
சிக்கிய மின்மினியின்
மின்னும் உடல் கண்டு
கிட்டியது கரங்களில்
குட்டி விண்மீன் என
விழிவிரிக்க நேரமில்லை!

இரவின் முதிர்ச்சியில்
வானில் வெள்ளி நரை
சூரியக் குழந்தையை,
பிரசவித்த பூமியின்
புன்னகைப் பூக்களில்
பனித்துளி வியர்வைகள்.
விடிகாலை நேரத்தில்
புத்துணர்வு நுகர்வதற்கு
அடர்த்திக் காற்றில்
சத்துணவு பெறுவதற்கு
அதிகாலை நேரத்தில்
நடைபயில நேரமில்லை!



மெல்லிய உணர்வுகளை
மேம்படுத்தும் நிமிடங்களை
துல்லியமாய் திட்டமிட்டு
பதவிக்கு விற்றேனோ?
அந்தஸ்தின் வாய் நிரப்பி
அலைபாயும் அடிமனதை
பட்டினியாய் விட்டேனோ?
இயந்திர வாழ்க்கையில்
இன்னும் பல இழப்பு
எல்லா வலிகளையும்
சொல்ல இங்கு நேரமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

எங்கோ பிறந்து
ஏனோ வளர்ந்த
ஏதோ ஒரு மொழியல்ல
தமிழ்

சிந்து வெளியின்
சின்னங்கள் கூறும்
தொன்மை தமிழின்
வித்தை

சிந்தனையின்
சிகரங்கள் தாண்டும்
வீரத்தமிழர்
வித்தை

"எழு" என்ற பெயரில்
ஏராள மொழிகளுக்கு
தாயாகி நின்றாள்
தமிழின் தாய்

ஏழுலகாளும்
வீரப்புதல்வர்களை
பெற்றகம் மகிழும்
தமிழ்த் தாய்

இலக்கணைக் கட்டுடல்
இலக்கியப் பட்டாடை
அழகிய திரு நுதலில்
பொட்டாய் பண்பாடு
இயல் இசை நாடகம்
இலங்கும் ஆபரணமாய்
பூண்ட தமிழ் மகளின்
உலகப் பவனி

கருக்கொண்ட
சொற்கள் கண்டதுண்டா?
தமிழுண்டு
திணை, பால், வழுவற்ற
செருக்குடன் மிளிரும்
செல்வ மொழி தமிழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

விண்ணுலகம் வியக்கும்
கோபுரங்கள்
கண்தவம் செய்த
சிற்ப ஓவியங்கள்
மண்ணில் கவியெழுதும்
ஆடல் என
இன்னும் பல கலை வளர்த்த
பக்தி மொழி
தமிழ்

வாகை மலருக்கு
தட்டுப்பாடு
வானம் வரை இல்லை
கட்டுப்பாடு
என வேலும் வாளும்
சரித்திரம் எழுதிய
வீர மொழி
தமிழ்

காற்றை உருக்கி
காதலுக்கு தூதனுப்பி
நாற்று நடுபவரும்
நாடாளும் மன்னர்களும்
போற்றும் குலப்
பண்பு குறையாமல்
பேசி மகிழ்ந்த
காதல் மொழி
தமிழ்

ஆதியொடு அந்தமும்
இல்லாத மொழி இது
அலைமோதும் கடற் கோளும்
அலைக்கழிக்கும் இடம் பெயர்வும்
அண்டியும் அழியாத
ஆரோக்கிய மொழி தமிழ்
ஆறாயிரம் ஆண்டு
தொன்மையின் சான்றுகள்
இன்னும் உறுதியாய் வாழும்
நூறாயிரம் ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிசங்கு சொர்க்கம்

எமது மேடைகளில்
பரதங்கள் அரங்கேறும்
மிருதங்கங்கள் முழங்கும்
மிருதுவாய் விரல்கள்
தாளமிட்டுக் கையசைத்தாலும்
எம் பாதங்களின் கீழ்
மண்டையோடுகள் எங்கோ
மறைந்திருப்பதை
நாமறிவோம்

இசைக்கின்ற புல்லாங்குழலின்
இனிமையினூடே
எங்கோ ஒரு மூலையில்
முனங்கும் எம் உறவுகளின்
ஓலம் ஒளிந்திருப்பதை
எம் உணர்வுகள் மறக்காது

தோரணங்களும்
மயக்கும் சித்திரங்களும்
கண்களை கவர்ந்தாலும்
மண்ணில் உயிர் எழுதும்
குருதிச் சித்திரங்கள்
கண்முன்னே
வந்து போகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிசங்கு சொர்க்கம்

கலையும் கலாசாரமும்
பண்டிகையும் திருவிழாவும்
மங்காது மொழியை
மரணிக்காது காப்பதற்கே

உதட்டளவில் சிரித்து
உடல் சுற்றி ஆடைநெய்து
ஊர் சுற்றி திரிந்தாலும்
உள்ளத்தில் பலமாக
உயிர்களின் அழுகுரல்கள்
உட்செவி கிழிக்கிறது
அன்று அசரீரியாய்
பின்பு அடிக்கடியும்
கேட்ட குரல்கள்
இப்போது அருகிலேயே
கேட்கின்றன

வாழ்வுப் பந்தியில்
அறுசுவை உணவுகளாய்
ஆடலும் பாடலும்,
பசித்த குடல் சுமக்கும்
மரத்த வயிறுகள் நினைத்து
மெல்லவும் முடியாமல்
சொல்லவும் தெரியாமல்
திரிசங்கு சொர்க்கத்தில்
அவ்வப்போது நாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் மழைதானோ?

மழைத்துளி என நினைத்து வாசித்தால்
மழைத்துளியாயும், புலம்பெயர்ந்தோரை
நினைத்தால் அவர்களைக் குறிப்பதாயும்
தோன்றும் உருவகக் கவிதை

❖❖❖❖❖❖❖❖❖

மழைத்துளியே.... நீ

உயரிடம் பிறந்து உயிர் கொண்டு உருவாகி
பெயரிடம் பெற்று எங்கோ ஓர் ஊர்க்கரையில்
துயரிடம் விடைபெற்று அமைதியாய் தவழ்ந்தாய்

விதியிடம் கொண்ட ஒப்பந்த நியதியில்
வதிவிடம் தேடி நகர்க்கடல் வந்தாய்
சதியிடம்பெறும் உவர்நகர் கடலினில்
மதிகெட்டலைகளில் மயங்கியே உழன்றாய்

உக்கிரக் கதிரவன் போர் நெருப்புமிழ
திக்குத் திசைதேடி பறந்திட நினைத்தாய்
நிலைமாறி பெயர்மாறி ஆவியாய் உருமாறி
தலைமாறி இடையினில் ஆங்காங்கே
இளைப்பாறி இறுதியில் மேகமாய் மிதந்தாய்
உன் உறவுகள் மண்ணிலே உண்டு உறங்கிட
சிறகுகள் இன்றி சில்லறை துளி தேடி அலைந்தாய்
பனியிலும் இரவிலும் உன்நலம் மறந்தாய்
நினைவிலுன் நிலத்தினை நினைத்தபடி கிடந்தாய்

இறுதியில் உன் நிறைகூட நிறைவாக
பரிதியில் உன் இனம் உயிர்க்கொண்டு நடமாட
உறுதியாய் நீ சேர்த்த செல்வத் துளிகளை
மழையென சுமந்து மறுபடியும் வந்தாய்

மழையே மழையின் துளியே - நீயும்
கரைகடந்து சென்று எம்குலம் வாழ
பணமழை பொழியும் எம் சகோதரர் போல்தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாசகம்

சுற்றி நான்கு திசைக்கும்
சுழன்றோசை எழுப்பிய – என்
கோயில் மணியின் மேல்
கட்டிய கூட்டில்
குருவிகள் கூட
இன்று இல்லை.

யுத்த களம் கடந்து வந்த
காற்றடித்த
கோபுரச் சுவற்றினில்
இரத்தக் கறைகள்

வற்றிய கேணியில்
புற்றரை பற்றையாய்
எட்ட நடுவினில்
ஒற்றையாய் ஒரு
பழுப்புப்பாதணி

தலைபற்றி உடல் கருகி
தனிமையில் நிற்கும்
முற்றத்து நிலவினை
முத்தமிட்ட பனைமரங்கள்

"ம்" என்ற எழுத்தில்
துளை விழுந்து போனதால்
"ஓ" வென்று அலறும்
கோபுர உச்சி

காட்சிகளின் கனத்தில்
மூடும் இமைகள்
கண் மணியின் பரப்பில்
சின்னதாய் ஒரு மின்னல்

புன்னகை புரியும்
வேலனின் திருவடியில்
சின்னதாய்
ஒரு வாசகம்
"யாமிருக்கப் பயமேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கப்படும் காதல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கப்படும் காதல்கள்

காதல் சுரங்களை
மீட்டத் துடிக்கும்
எம் இளம் விரல்களை
ஏன் கட்டிப் போடுகின்றீர்கள்?

மீறி நாம் மீட்ட
எம் விரல்கள் கிழிந்து
குருதியில் நனைந்து
இதயத்தந்திகள்
சுருதியிழந்துவிடுமே

காதல் கருவியில்
இனம் நிறம் பணம்
இவற்றிற்கு இடமில்லை
இல்லாத இடத்தில்
தடையை ஏன் திணித்தீர்கள்
இரசனையில்லா இரகசியத்தை
அம்பலப்படுத்தவா?

எம் உலகில் எம் இசையை
நாமே மீட்டிக்கொள்ள
காதுகளற்ற நீங்கள் ஏன்
வீணாய்க் கவலைப்படுகின்றீர்கள்?

காதல் இசைக்கு
காற்று தேவை என்பதை
கண்டுபிடித்து
வந்து போகும் எம்
சந்திப்புக்களை
தடுத்தீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கப்படும் காதல்கள்

எம் இதய அறைகளில்
சேமித்த காற்று நிரப்பி
நாமும் வாழ்ந்து எம்
இசையையும் வாழ வைத்தோம்

இசை கேட்க முடியாத தூரத்தில்
இருவரையும் பிரித்து வைத்தீர்கள்
இதயத்தந்திகளின் அதிர்வுகளை
உன்னிப்பாய் உணர்ந்து
நினைவலைகளின் மெல்லிய
சலனத்தில் வாழத்துணிந்திருந்தோம்

சளைக்காமல் தொடராய்
நிலைத்த காதலை குலைக்க
கடைசி ஆயுதமாய்
பாசம் எனும்
இருமுனைக்கத்தியை
இடையில் செருகிவிட்டீர்கள்

பாதி நாட்கள் மீட்டாது
பூட்டி வைத்து துருப்பிடித்த
எம் வாழ்க்கையை மீட்ட
விரல்களை தடுத்து
முட்களைக் கொடுப்பீர்கள்

குத்திக் கிழிந்து
தந்திகள் அறுந்து
குலைந்து நிற்கும்
எம் வாழ்க்கையை
குழிதோண்டிப் புதைத்து
மலர்தூவி தலை தடவி
புனிதம் எனக் கூறிவிட்டு
மறந்து போய்விடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைக்குள் விருட்சங்கள்

கண் மை எழுதி எழுதாதும் அழகுடைய
பெண்மை மனிதரில் எழில் என்பதுண்மை.
மென்மை மெருகேற்ற தாய்மை மேன்மை தர
பதுமையாய் இருந்தாலும் தேவைவர திண்மையுடன்
தனிமையாய் தானியங்கும் தன்மை உண்டென்று
தொன்மையிலும் தரணியில் சான்றுண்டு.


நிகரற்ற செல்வச் சிறப்புடை கண்ணகி
புறநகரே மதுரையோ என நினைத்த பேதை,
ஓரிரு வார்த்தையும் அதிர்ந்துரைத்தறியாள்
ஆருயிர்க் கணவன் கொலையுற்றான் என்றறிய
மாபெரும் சபையினில் தனிமையில் நின்று
தேரா மன்னா! யாமுடைச்சிலம்பு முத்துடையதுவென
பேரறிவால் பெரும் நுட்பமாய் வென்றாள்.

இடர்தருவாய் நீயே என இரவிகுலன் நகைத்த பதுமை
இமையாமல் நோக்கத்தகும் அழகுடைய சீதை
அணையாது எரியும் அநுமனின் வால் கண்டு,
"அக்கினியே நீ சுடல்" எனும் கணத்தில் அனல்
நின்றதுவே.
தனிமையிலும் இராவணனை பதர் என்று தூற்றும்
துணிவின் முன் வலிமைமிகு அரக்கரும் தோற்றார்.

கதைகளும் காவியமும் இன்னும் பல உண்டு
விதைகளில் விருட்சம் ஒளிந்திருப்பதுண்மை.
நிஜத்தினில் சான்றுகள் எண்ணற்றதின்று
வியக்கும் மனித இனம் பெண் சாதனைகள் கண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுச் சங்கிலி



1995ம் ஆண்டு சூடானில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. பசியை தீர்ப்பதற்காய் ஐக்கிய நாடுகள் உணவு முகாம் நோக்கி தவழும் இக்குழந்தையை உண்ண கழுகு காத்து நிற்கின்றது. பல விருதுகளை வென்ற இப்புகைப்படத்தை எடுத்தவர் மன அழுத்தம் தாழாமல் பின்பு தற்கொலை செய்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுச் சங்கிலி

பறந்து வந்து
விருந்துண்ணக் காத்திருக்கும்
பறவையே!
பாவம் நீ

என் எலும்புகளில்
ஒட்டியிருக்கும்
சதைத் துணுக்குகள்
போதுமா உனக்கு?

மறந்து போன என் பசியை
மரத்துப் போன என் குடலை
சுமந்து செல்கின்றேன்
நிறுத்தாதே என்னை
இன்றேனும் என் களத்தில்
இரு கவளம்
உணவு விழ வேண்டும்
இறுதி ஆசை இது.

சில நூறு மைல் தொலைவில்
நீ வரும் வழியிற் கண்ட
கொழுத்த நாடுகளில்
செழித்த மனிதர்கள்
சத்தியமாய்ச் சொல்கின்றேன்
என் இனம் தான்.
மனித இனம் நான்.
ஏன் இல்லையென்று
மறுக்கிறாய்?

நிமிர்த்த முடியாமல்
கறுத்துப்போய் தெரிவது
என் உடலல்ல
தோலின் அடர்த்தி போதாது
துருத்திக் கொண்டிருக்கும்
என் எலும்புகள் தான்.

வேளைக்கொரு உணவுண்டு
நாளைக்கும் உணவுண்டு
என நிச்சயமாய்த் தெரிந்த
மனிதர்களிடம் போய்ச் சொல்
நீங்கள் விருந்துண்ண
மருந்தெடுக்கின்றீர்கள்,
எமக்கு
உணவுதான் மருந்தென்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுச் சங்கிலி

நான் ஊருவது கண்டு
உற்றுப் பார்க்கின்றாய்,
சற்று நேரத்திலென்
மூச்சு நின்றுவிடுமென
கற்றிருக்கிறாய்,
என்போல்,
எத்தனை அனுபவம் உனக்கு
என் தேசத்தில்.

பூமி இளம் பெண்ணென்றால்
அவள் முகத்தில்
வடுக்களாய் வரண்ட,
நிலத்தில் வாழும்
கறுப்புக் கண்ணீர்
துளிகள் நாங்கள்.

பூமியே நீ தாயென்றால்
உன் மடியில்,
எம் நாட்டை கிடத்திவிட்டு
மலை நதி மழையென்னும்,
உன் திருமுலைப் பாலையெல்லாம்,
ஏன் எம்
சுயநலச் சகோதரர்களுக்கு
மட்டும் ஊட்டினாய்?

முடிந்தால் எம்மை உயர்த்திவிடு
இல்லையேல்
மூச்சுக் காற்றை
நிறுத்தி விடு!

வெற்றுடலை
உண்ணக் காத்திருக்கும்
பறவையே
உனக்கு சற்றேனும்
இரக்கமில்லையா?

பெற்ற தாய்க்கே
என்னை சுமக்க
வலுவில்லை
மற்றவர்க்கென்ன
அக்கறை?
பரவாயில்லை.
விற்பதற்காய் என்னை
படம்பிடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுச் சங்கிலி

என் இனத்து
அந்த நடை பிணத்தை விட
சிற்றறிவு தானே உனக்கு?

தோல்வி கண்டு சாகத்துடிக்கும்
கோழைகளிடம் போய்ச்சொல்!
புற்கள் கூட முளைக்காத
என் மண்ணில்
முட்களைச் சூடி
முன்னேறுகின்றேன்
மற்றொரு நாள் வாழ்வதற்காக.

எட்டாத நிலவையெல்லாம்
தொட்டுவிட்டு
எட்டிய தூரத்தில்
எம்மை இப்படியே விட்டு விட்ட
ஏட்டறிவு மனிதரிடம்
போய்ச் சொல்,
உணவுச் சங்கிலியில்
பறவையின் விருந்து
மனிதன் என்று

மொட்டாகி மலரவெல்லாம்
போசணையில்லை எமக்கு
கொட்டும் உணவில்
ஒருபிடி சேர்த்துக் கொடுத்திருந்தால்
முன்னாயாவது
முளைத்திருப்போம்

பறந்து வந்திருக்கும்
பாசக்கயிறே
உன்னிடம் ஒரு
விண்ணப்பம்,
வீழும் முன் குற்றுயிராய்
என்னைக் கொத்தி
கொன்றுவிடாதே

வாழ முடியாத
என் உடல்
மடியும் வரையாவது
முடிந்தால்
காத்திரு!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலையேற்றம்

விளிம்பைத் தாண்டி
வழியாத தேநீர்,

குப்பையின் வயிறு குறைந்து
கர்ப்பமான குளிர்ப்பெட்டி,

வீண் செலவாய்
தெரிந்த விருந்து,

சுற்றம் எதிர்த்துச்
சுயமாய்ச் செல்ல
சற்றுத் தயங்கும்
காதல் கதைகள்,

வான விளக்கே
போதுமென்ற முற்றம்,

சுட்ட பகலிலும்
சுழலாத மின்விசிறி,

மருந்து எதற்கென
துணிந்த காய்ச்சல்,

புதிய கொள்கையாய்
கொண்டாடா பண்டிகைகள்,

மாதமிருமுறை
மாதக் கடைசி,

சட்டம் இயற்றாமல்
குறையும் சனத்தொகை,

தினம் தினம் மாறும்
வறுமைக் கோடு
ஏணிப்படி உடைந்த
ஊதியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையேற்றம்

வரவுப் பதிவுகள்
மட்டும் கொண்ட
வங்கிக் கூற்று,

பர்முடா (Barmuda) முக்கோண
பணப்பைகள்,

பட்டினி போட்ட
சேமிப்புப் புத்தகம்
வயிறு நிரம்பிய
கடனட்டைகள்,

மோதிரம்
தொலைந்த
நடு விரல்கள்,

போதி மரமின்றியே
ஞானம் பெற்ற
புதிய ஞானிகள்,

இவையனைத்தும்
விலையேற்றம் தந்த
இலவச இணைப்புகள்


விலையேற்றமும்
பண வீக்கமும்
கைகோர்க்கும்
மண நாளில்,

சாட்சிக் கையெழுத்திட்டு
கண் கலங்கும்
அப்பாவிப் பொதுமக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள் நீ

என்றாவது ஒரு நாள்
கணித்ததுண்டா?
மனக்கிணற்றின் ஆழத்தை
தனிமையில்

உடைத்ததுண்டா?
புதுப்புனல் ஊறாது
தடுக்கும் தடைகளை

புதைந்து போன வன்மங்கள்
அழுகிய பொறாமைகள்
உக்கி அழுக்கான
மனக்கிணற்றினை
தூர் வாரிய
கடைசி நாள் எப்போது?

மூடக் கொள்கைத்
தவளைகட்கு
விளிம்பு தாண்டி
உலகு காட்டியதுண்டா?

துணிச்சலின்றி மூழ்கும்
மௌனக் காதலை
எதிர் நீச்சல் தெரியாமல்
தத்தளிக்கும் இலட்சியத்தை
நம்பிக் கை கொடுக்க
நேரம் கிடைத்ததா?

மனித நீரோட்டத்தில்
அள்ளிய ஒரு பிடி
நீர் நீ

அள்ளிய அறிவு நீர்
சாக்கடையிலிருந்தா?
புனித நதியிலிருந்தா?
மற்றொருவர்
தாகம் தீர்க்கத்
தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குள் நீ

பரம்பரை உடல் கிணற்றில்
திறமைப் புதையல்
புதைந்திருக்கிறதாவென
தேடிப் பார்த்ததுண்டா?

இயல் இசை மழையில்
நனைய நினைத்ததுண்டா
மனக்கிணற்றை
நேரமூடி கொண்டு
மறைத்ததுண்டா?

சிறுவயதில் தொலைத்த
நட்பு நாணயங்களை
மீட்டெடுக்க நினைத்ததுண்டா?

ஆழத்தில் புதைத்த
பொன் நினைவுகளை
நேர நீர் கரைக்காதெனினும்
மறதிப்பாசி படிந்துவிடலாம்

அமைதியின்றி
உன் மனக்கிணற்றை
எட்டிப்பார்க்கும்
சமூக முகங்களுக்கு
அதே பதில் பிம்பம்
காட்டியதுண்டா?

உன் மனதின் ஆழம்
தெரிந்திருக்கலாம்
தெரியாதுமிருக்கலாம்

உயிர்க்கயிற்றில்
ஊசலாடும்
ஊக வாளிகள் கொண்டு
ஊடுருவிக் களைத்திருக்கும்
மனக்கிணறு
அவ்வப்போது
நலம் கேட்க,
தனிமையில் நீந்தி
உயிர குளிர
விளிம்புகள் ஒட்டி
திட்டமிட்டு அமைத்ததுண்டா,
விடுமுறைப்
படிக்கட்டுகளை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பியல்

ஒரே மன
அதிர்வுகளில்
உருவாகும்
அற்புத அலைவரிசை.

முரண்பாட்டலைகளை
சங்கீதமாக்கும்
புதிய விஞ்ஞானம்

உலக மேடையில்
நடிப்புத் தேவையற்ற
நாடகப் பாத்திரம்

நட்பின் ஒத்த சொல்
நம்பிக்கை
எதிர்ச்சொல்
துரோகம்

சயவும்
சகவும்
சகாவானால்
சந்தோஷத்தின்
பெருக்கற் குறி

துருவ வேறுபாடின்றி
கவரும் காந்தம்
எல்லா முனைகளும்
வெற்றித் திசை நோக்கி


மூலதனமின்றிய
முதலீடு
இலாபப் பங்கீட்டில்
அனைவருக்குமே
முழுப்பங்கு

தேவையின் போது
சேவை செய்யும்
நட்பு – கடன்
வாழும் காலம் வரை
நன்றி – வட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் சுமக்கும் சித்திரங்கள்



துலாவித் துலாவி
கண்கள் கிழிந்தன,
தெருவற்ற வெளியில்
தொலைந்து போன வீட்டை.

உயிர் நிறைந்த கூடுகள்
உடல் சுமந்த வீடுகள்,
இன்று பயிர் முளைத்த காடுகளில்
துளை விழுந்த ஏடுகளாய்!

பிணவறையில் அரைகுறையாய்
அடையாளம் காண்பது போல்,
சிதிலங்களின் மத்தியில்
அனுமானக் கண்டுபிடிப்பு.

கலியுகத்தில் கண்ணனில்லை,
துரியோதனன் கையில்
திரௌபதையாய்
துகிலுரிந்துக்கிடந்தது
துரதிஷ்ட இல்லம்.

இராவணன் கால் பட்டிருக்கும்,
கல்லாய் இருந்த அகலிகை,
மண்ணாய்க் கிடந்தாள்.

சிதறிக்கிடந்தன
வியர்வைத் துளிகள்,
இடிபாடுகளாய்.

புதைந்து கிடந்தது
உழைத்த புதையல்,
முட்காடுகளால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர் சுமக்கும் சித்திரங்கள்

தலைக்கு மேல்
நீல விசும்பு,
தலையில்லாமல்
விசும்பும் வீடு.

உடைந்த சுவர்
நிலையில்லாமல்,
பெயர்ந்த கதவு
நிலையில்லாமல்.

அறையிருந்த இடத்தில்
அடுப்பு மூட்டி,
யாரோ சமைத்த
குறைகள்.

ஆசையாய் வாங்கிய
தேக்குக் கட்டில்,
முடங்கிக் கிடந்தது
குறை கால்.

மூட்டிய அடுப்பின்
மத்தியில்,
எஞ்சிய காலின்
சாம்பல்.

வேகாத வெயிலில்
வெந்து போனது,
இதயம்.

நான் இருக்கும் வரை
குற்றுயிராய்,
சுவர் சுமக்கும்
சித்திரமே!
நீயிருக்கும் வரை
என் நம்பிக்கைகள்
நிலைத்திருக்கும்..........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி நினைவுகளில்

வானவில் கனவுகளை
வெண்மை சுமந்தது,
சீருடையில்

பரவசமாய் பல
பழுப்பு நிலவுகள்,
புழுதியில்

பதின்மூன்று வருடங்கள்
வசந்தத்தின்
வாசற்படிகளில்

ஒவ்வொரு படி தாண்ட
முதுகுச்சுமை குறைந்து
அறிவுச்சுமை ஏறியது

ஏறிய சுமைகளை
நிறுத்துப்பார்ப்பது
பரீட்சைகளில்

பரீட்சைக்கு முன்
கடைசி நிமிடம் புரட்டி
கிழிந்த சுவடுகள்
புத்தகத்தில்

சமத்துவம் பேச
சலிப்பதில்லை
குறைந்த புள்ளிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளி நினைவுகளில்

நட்பு எதிரியானது
தற்காலிகமாய்
போட்டிகளில்

கிணறு வெட்ட
புதையல்,
கலை நிகழ்வுகளில்

அமைதிக்குப் பின்
புயல்
இறுதி மணி ஓசையில்

பிரிவோம், சந்திப்போமா?
நட்பு நனைந்தது
கண்ணீரில்

மழை நின்ற பின்பும்
மண்வாசனை
பள்ளி நினைவுகளில்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னைக் கோர்க்கும் நூலிருந்தால்

எங்கோ நிகழ்ந்த
ஒரு சூரிய கங்கைச்
சங்கமத்தில்
உருவான முகிற் குழந்தை
குமரியாகி
குறும்பு கூடி
ஏனோ என்னைத்
தேடி வந்து
உடல் நனைக்கும்
உற்சவத்தில்
உற்றுப் பார்த்தேன்

கண்களால்
கல்லெறிந்து
வான விதானக்
கண்ணாடி உடைந்து
சில்லுகள் குத்தி
மேனியெங்கும்
நீர்க் கீறல்கள்

மேலிருக்கும்
மேகச் சிலம்புடைந்து
சிதறுபவை
முத்துக்களா?
வைரங்களா.........?



கடலலையில்
காதல் கொண்ட
கதிரவன்
காந்தர்வ மனம் புரிந்து
வேகமாய் தூக்கிச் சென்ற
கன்னி மேகம்
தாய் வீடு தேடிவந்த,
மழை நேரம்
மோதி விழுந்தென் மேல்
வீதி கேட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைக் கோர்க்கும் நூலிருந்தால்

ஏந்திய கைகளில்
தேங்கிய முத்தின்
தரம் புரிய
மழையே
நீ என் கழுத்தில்
ஆரமாவாயோ?
எனக் கேட்டேன்

மழைப் பெண்ணின்
சிரிப்புத் தூறல்
நின்று போனது
பேரமேதும் பேசாமல்
ஊமையானாள்
கையிடுக்கில் நுழைந்து
தாய் வீடு சென்றாள்

மண்ணில் நுழைந்தவள்
என் கண்ணில்
வெளி வந்தாள்
கலங்காதே என்று கூறி
காணாமலே போனாள்

அன்று முதல்
மழை வரும் போதெல்லாம்
மயிலானேன்

வந்து போன பின்
குடை பிடித்து
கால் முளைத்த
காளானானேன்

பொன் வெள்ளி
நகை வெறுத்தேன்
நகையிழந்த
நங்கையானேன்

என் கலக்கம் கண்டு
மழை இரங்கலுற்றாள்
கணவனிடம் சொல்லாமல்
இறங்கி வந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைக் கோர்க்கும் நூலிருந்தால்

இடையில் வந்த
கதிரவக் கணவனை
கண்ட பொழுதினில்
உறைந்து போனால்

நாணம் கொண்டு
சிவப்பானாள்
பயம் கொண்டு
ஊதாவானாள்
நியாயம் சொல்ல
பச்சையானாள்
நிர்மலமாய் சிரித்து
மஞ்சளானாள்

மழை மனைவிக்கும்
கதிரவக் கணவனுக்கும்
வானில் உரையாடல்
வானவில்லாய் நடந்தது

வண்ணம் கண்டு
மூர்ச்சையானேன்
வடிவம் கண்டு
பேச்சிழந்தேன்

எண்ணக் கனவில்
மழை வந்தாள்
சின்னதாய் ஒரு
கருத்துச் சொன்னாள்

"என்னைக் கோர்க்கும்
நூலிருந்தால்
பெண்ணே
உன் சங்கில்
ஆரமாவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைக் கோர்க்கும் நூலிருந்தால்

என்னைக் கோர்க்கும்
நூலிருந்தால்
சொல்லியனுப்பு
நான் வருவேன்."

மழையின் வாசம்
நின்று போனது
மனதின் தேடல்
தொடங்கி விட்டது

விந்தை புரியும் விஞ்ஞானமே
சிந்தை உயர்ந்த துறவிகளே
அவளைக் கோர்க்கும் நூலிருந்தால்
என்னை அழைத்துச் சொல்லுங்கள்
என்ன விலையும் நான் தருவேன்
மழை திரவ வைர மாலைக்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்குமா?

பூக்களைப்
பறிக்கின்றேன்
எனக் கூறி
கொய்த மொட்டுகள்,

குளிக்கையில்
பேரலையில்
மூழ்கிய எறும்புகள்,

நான் பட்டுடுக்க
வதைக்கப்பட்ட
பூச்சிகள்,

நான்
உண்பதற்காய்
தன் குழந்தை தந்த
கால் நடைத் தாய்கள்,

நான் சுவைத்த
பாலால்
பசி தீராத
கன்றுகள்,

என் பண்டிகைக்காய்
தன் வீடிழந்த
சுவரோர சிலந்திகள்,

என் கால் சக்கரத்தில்
விபத்துக்குள்ளான
பாதசாரி நத்தைகள்,

என் நாவினிக்க
புகை பொசுங்கி
சேமிப்பை
பறிகொடுத்த
முகம் தெரியா
தேனீக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிக்குமா?

முளைபோட்டு
முளைக்க வைத்து
தலை தூக்கியதும்
பயிரிடாமல் போன
நவதானியங்கள்,

மனமுட்கள்
களைய
கை தானாய்
கழற்றியெறிந்த
அப்பாவிப் புற்கள்,

தன் சமாதியில்
என்னை உறங்கவிட்ட
கட்டில் மரங்கள்,


என் சொல்
ஈட்டிப்பட்டு
காயம்பட்ட
இதயங்கள்,

இன்று என்னை
மன்னிக்காது விடினும்
என்றாவது ஒருநாள்..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவின் முடிச்சுக்கள்



முளையிலே தெரியும் விளையாட்டுப் பயிர்களை, பாடச் சுமையேற்றி கிள்ளி எறிந்து விடாதீர்கள் பெற்றோர்களே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவின் முடிச்சுக்கள்

வெயில் கறுப்பும்
வியர்வை பெருக்கும்
வெற்றிக் களிப்பில்
மறந்தே போகும்
சொர்க்கம்
மறுக்கப்பட்டதேன்?

புற்றரை வாசம்
நுகரும் நாசியும்
புதுக்கறை சேர்க்கும்
சேற்றின் ஆசியும்
புத்துணர்வு தராதென
யோசிக்கப்பட்டதேன்?

உயிரற்ற பேனா
தொடர்ந்தோட
உயிர் கொண்ட
கால்கள்
ஓய்ந்திருப்பதேன்?

இக்கரையில்
விளையாட்டு
அக்கரை
சேர்க்காதென்ற
அக்கறையினாலா?

தன் துறை எதுவென
அறியும் அறிவு
குறைவெனத் துணியும்
முறையினாலா?

அழுதழுது அழைக்க
வர மறுத்திருந்தால்
அன்று
தொழுது பிழைக்கும்
தொழில் வந்திருக்காதோ
இன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவின் முடிச்சுக்கள்

வியக்கும்
திறமைக் கால்களை
கட்டிவிட்டு,
விரும்பாத புலமையை
முதுகிலேற்றி
முன்னேறென்றால்
முடியுமா?

காலில்
சிறகு கொண்டு
பறக்கும் பறவைகள்
நூலை விழுங்கி
வரும் பட்டம்
விரும்புமா?

ஏட்டறிவு பலருக்குண்டு
திக்கெட்டும் புகழ்பரப்பும்
விளையாட்டறிவு சிலருக்குண்டு
என பகுத்தறிவுக்கெட்டாத
காட்டறிவு பெரும் சோகம்.

காலையில் பூத்த
மலர்கள் எல்லாமே
மாலையில், மாலையில்
சேர்வதில்லை.
காற்றின் சேலையில் ஒட்டி
ஒன்றிரண்டு
சோலையில் பறந்தாலும்
மகிமை இழப்பதில்லை.

கட்டி வைத்து
ஒடுக்கிய
விளையாட்டுப் பாதணியை
தட்டியெடுத்து
பின்பொருநாள்
கால்நுழைக்க
எட்டிப் பார்க்கும்
முதுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவின் முடிச்சுக்கள்

பாட நூல்
கட்டுக்குள்
சிக்கியிருக்கும் திறமை

துடிக்கும் கால்களை
தடுத்த மடமையால்
தடுக்கி விழுந்திருக்கும்
வாழ்க்கை.

முளை வேரருந்த
மரங்கள் தடுமாறி
துணைவேர் கொண்டு
வளர்ந்தாலும்
நினைத்த பலன்
கொடுப்பதில்லை,
புயல் எதிர்க்கும்
பலம் இருப்பதில்லை.

மனவேர் மகிழாத
துறையில் தொழில் செய்து
வரும் பெயர்
நிலைப்பதில்லை
வாழ்க்கை
இனிப்பதில்லை.

திறமைக் கால் சுமந்து
தேடல் கொண்ட
இளமையை
வறட்டுப் பசை பூசி
இருட்டில் கட்டி வைத்து
வாட்டுவது
பாசமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமையூரும் காட்சிகள்

கந்தகப் புகையில்
கசங்கிப் போய்
ஆயுள் குறைந்த
அவசர மலர்கள்

மிதிக்கப்படாத
புற்கள் தாண்டி
பறித்தெடுக்கும் முன்
"பாதமிழக்காதீர"
எனும் அறிவிப்புப் பலகை

நெருங்கிய வானில்
நெருப்புக் குழல் சுமந்து
நெடுந்தூரம் பறக்கும்
பிணந்தின்னிக் கழுகுகளின்
தொழில்நுட்பச் சாயல்

கந்தகக் காற்று கிழித்து
குருதிக் குழம்பு தேடும்
சூனியக் கிழவியின்
சுழலும் துடைப்பமோ?

பனம் பழம் விழும் சத்தம்
பல நாளாய் கேட்காத
பக்கத்துக் காட்டில்
ஏதோ ஒரு மரத்திற்கு
தலையிருந்த போது,
காகம் கட்டிய
முட்கூடு
மரச் சுள்ளியோ?
மனித
எலும்புகளை அள்ளியோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இமையூரும் காட்சிகள்

எலும்புகள் துருத்திய
மூன்று கால் மாடுகள்
தாண்டிச் செல்லும்
குட்டிச் சுவர் மீது
ஒட்டிக்கிடக்கும்
சிவப்புச் சிதறல்கள்
வெற்றிலைச் சாயமல்ல....

உல்லாசப் பயணம்
வந்தவிடத்தில்
உன் ஆசனம் போட்டு
அமர்ந்து கொண்ட
நிதர்சனக் காட்சிகள்,
கண்ணீர் தாகம் கொண்ட
இமைகளின் வழியே......

அழிந்து போயும்
அழகாய்த் திகழும்
இந்த அற்புத நிலத்தில்
அநாதையாய் போன
தெருவோர மாமரத்தில்
குலை குலையாய்
காய்த்துத் தொங்கும்
சிவப்புப் பழங்கள்
இன்றைய ஆறுதலாய்,
நாளைய நம்பிக்கையுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

வெள்ளன ஒழும்பி
கெதியா தல முழுகி
கொல்லேல பூ ஆஞ்சு
கோயிலுக்குப் போயிருந்தன்

சாமி கும்பிட்டுட்டு
சுத்தி திரும்பினன்
வாசலில குட்டி நாய்
ஏலாம படுத்திருக்கு

தூரத்தில அதின்ர தாய்
சுருண்டு விழுந்திருக்கு
எழும்பி வாறத்துக்கு
பெலனில்ல போலிருக்கு

கிட்டப் போய் பாத்தன்
கெட்ட மணம் வீசுதெண்டு
வாயில ஈ மொய்க்க
தாய் செத்துப் போயிருக்கு

சுத்தி சுத்தி வந்ததை
மணந்து பாத்த குட்டி
முட்டிமுட்டி வயித்தில
பால் குடிக்க பாத்தது

நெஞ்சு வலிச்சு நான்
தொஞ்சு நிக்கிறன்
எட்டியிருந்த யாரோ
கல்லெடுத்து வீசிச்சினம்

பால்வாசம் மாறாத
பிஞ்சு குட்டி நாய்
காலில காயப்பட்டு
கத்திக்கொண்டு ஓடிச்சுது

பால் கொஞ்சம் வாங்கி
அந்த பிஞ்சுக்கு கொடுப்பமெண்டா
கொண்டு வந்த காசெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பே சிவம்

நிரம்பி வழிஞ்சிருந்த
உண்டியலில போட்டுட்டன்
வீடு வந்து காசெடுத்து
வேகமாக திரும்பி வாரன்
நாய காணேல
ஓடியெங்கும் போயிருச்சோ

தேடிக் களைச்சு நான்
வாசலுக்கு வந்து பாத்தன்
வயசுபோன ஒரு ஐயா
ஊத்த உடுப்போட
குந்தி இருந்திருந்தார்

நாய கேட்டதுக்கு
தூர காட்டினார்
பஞ்சு குவியலொன்று
பாதையில கிடந்தது
சொட்டுச் சொட்டா இரத்தமும்
லேசா தெரிஞ்சுது


தாய இழந்திட்டு
பரிதவிச்ச குட்டி நாய
கோயிலில கல்லெறிஞ்சு
விரட்டி விரட்டி அது
பாதையில ஓடி ஒரு
விபத்தில மாட்டீட்டு

துடிச்சு துடிச்சு அது
வேதன பட்டிருக்கும்
மலைச்சுப்போய் கைநழுவி
பால் கீழ விழுப் போக
வேகமா பிடிச்ச ஐயா
பல்லில்லா வாயால
உடைச்சு குடிக்கிறார்.
சாப்பிட்டு மூண்டு நாளான
அவர் வயிற்றில
பால வார்த்த புண்ணியம்
மட்டும் எனக்கு மிச்சம்

நெஞ்சுகனத்துப் போய்
தளர்ந்து நடக்கிறன்
அன்பே சிவமெண்டு
ஒலி பெருக்கி கூவிச்சுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

இது
உயிர் திறக்கும் சாவி!
உடல் சாவியின்
உட்சாவி

உடல் பொம்மை
உலகம் திறக்க
உந்துதல் தரும்
உருவமற்ற திருகாணி

கடிகாரம் விழுங்கிய
கும்பிக் களஞ்சியம்
கட்டளைப் போட
கதவு திறக்கும்
கடமைச் சாவி

சேர்த்த புண்ணியங்களை
அனுபவிக்கக் கிடைத்த
பொக்கிஷத் திறப்பு

சிலருக்கு இதுவே
பாவக் குகையின்
திறவுகோல்

உடல் ஓவியம்
அழகு பெற
வண்ணக் குழம்பை
குழைத்துக் கொடுக்கும்
தூரிகைப் பெட்டியின்
துருவற்ற
சாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி

புலன்களைப் பூட்டி
பசியை சிறை வைத்து
வேண்டுமென்றே
சாவி தொலைத்தவர்
ஞானிகள்

ஆரோக்கிய வாடகையை
அரை குறையாய் கட்டியதால்
மருத்துவ ஆணியில்
பசிச்சாவி கொழுவப்பட்டு
பரிதவிப்பவர் சிலர்

சமுதாயத் தளம்பல்களில்
முட்டி மோதும் விலைகளில்
சிக்கி
சாவியிருந்தும்
திறக்க முடியாது
பின்னால்
தள்ளப்பட்டு
பட்டினியாய் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமை


அறியாமை பற்றி
அறியாமையால்
மன ஓட்டில் ஒடுங்கும்
சின ஆமை

முன் செல்லும்
முயலைப்பார்த்து
மனம் குலைந்து,
முயலாமையால்
தோற்கும்
மூட ஆமை

நிலையாத வாழ்வில்
நிறைவின்றி
கருமம் கரையாமையினால்
முக்தித் தோணியில்
ஏறாது நிற்கும்
கரை ஆமை

கோட்டை போல் கிடைத்த
தன் தனித்துவ ஓட்டை
ஓட்டை விழ விட்டு விட்டு
பறவையின் சிறகுக்கு
முறையின்றி ஆசை கொள்ளும்
மூட ஆமை

தன்னலத்தால்
தன்னைத் தான் எரித்து
மண்ணலம் குலைக்க
மனக்குகையை பற்ற வைக்கும்
அனல் அடக்க முடியாமை
பொறாமை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்புறாவே

நினைவு தெரிந்த நாள் முதல்
நினைத்துருகி கவியெழுத
நிதமொரு தலைப்புத்தந்த
நிழல் பறவையே!!

நீல வானத்தில்
நிஜமாய் சிறகடித்து
நீ வரவில்லை
நிறைவாய் பரிசுகள்
நிறைய பாராட்டு
நிரம்பவில்லை மனம்.

உன் வெண்பட்டுடல் சுமந்து
உயிரற்ற என் தேசத்தின் மேல்
உயரப்பறப்பதற்கு
உடன்பாடில்லையா
உனக்கு!!

அன்றொருநாள்
அதற்குப் பின்புமொருநாள்
அருகில் பறப்பாயென
அறிவித்திருந்தாய்,
ஆனால் அது
ஆசையாய் மட்டுமே
அடங்கிவிடுமோ என
அச்சமாய் இருக்கிறது.

விரும்பியுன்னை
விருந்துக்கழைத்து
விரும்பாத உணவு படைத்து
விண்ணிலே பறக்கவிட்டு
வேட்டையாடி விடுவோமோ
என விசனப்படுகின்றாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்புறாவே

சொர்க்கப்பறவையே
சொல்
செங்குருதி பூசிய
சிறகுகள் கிழிந்து
செறுக்களங்கள் மீது
சளைக்காமல்
பறந்து பறந்து சொல்

கந்தகப்புகை நிரம்பி
காற்று கறுத்தால்
காலப்போக்கில்
கருக்கள் தரிக்காதென்று

எட்டாத பறவையே
என் நாட்டிலுன்
எச்சம் விழுந்தாவது
எஞ்சிய பூக்கள்
மலரட்டும்

மிச்சமுள்ள நாட்களில்
முயற்சியுடன் காத்திருப்பேன்
மிருதுவாய் உன் உடல் தடவி
முத்தமிட முடியுமென்ற
நம்பிக்கையில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசப்தக் கவிதைகள்

அமைதி எழுதும்
சந்தம்
இருவிழிகள்
அயர்ந்தால்
சொந்தம்

அமைதியின் ரீங்காரம்
இதய மலரில்
தேன் சுரக்கும்

இமைக் கதவுகள்
இறுக
இதயக் கதவுகள்
தாள் திறக்கும்

செவிகளின்
விழி வழியே
ஒலிக்காட்சி
திரைமேவும்

கவிகளின்
வழி விழியே
எனும் கருத்து
பொய்யாகும்

கவிதையூர் போக
வரிக்குதிரை
தயாராகும்

மரபுச் சாட்டைகளை
மதிப்பதில்லை
சில சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>நிசப்தக் கவிதைகள்</u>

கவிதையூர்
காணும்வரை
நிற்பதில்லை
வரிக்குதிரை

அமைதியின்
சந்தத்தில்
புதுக்கவிதை
உருவாகும்

மௌனத்திரை
முழுதும்
கற்பனை
வண்ணங்கள்

நினைவுத்
தூரிகையில்
நிழல் கவி
ஓவியங்கள்

ஏதோ ஒரு
ஓசை விழ
மனம் சிதறி
விழி விரியும்

சிதறிய
கவிமுத்தை
கோர்த்தெடுக்க
மனம் நினைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிசப்தக் கவிதைகள்

மனத்தாளில்
அச்சான
மௌனக்
கவிதைகளை
நினைவு மை
போட்டு
கைகள்
மீட்டெடுக்கும்

கற்பனைக்
கவி ஓவியம்
கரங்களினால்
முற்றுப் பெறும்

நிசப்த
கவிதைகள்
நிகழ்கால
மேடைகளில்
நிலைமாறி
அரங்கேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிப் பேருந்தில்

ஒருவரையும் கேளாது
வேறு தெரு தேடாது
வந்த வழி வழியே
தன் பயணம்
தொடரும் பூமி

நேரச்சீட்டெழுத்து
வேளை வரும் வரை
உயிராசனத்தில்
அமர்ந்திருக்கும்
பயணிகள்
நாங்கள்

உலகப் பேருந்தின்
ஓசோன் கண்ணாடி
உடைத்து ஊடுருவும்
விஷவாயுக்
காற்று வேண்டும்
விஷமிகள் சிலர்

தரையாய் இருக்கும்
தாவரப் பலகையை
வேரோடு பெயர்த்து
சூன்யக் குழியினுள்
தம் அழிவைத் தாமே
தேடும் மூடர்கள் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமிப் பேருந்தில்

எரிமலைப் புகை கக்கி
எரிவாயு இன்றியே
பயணிக்கும் பூமி
என்றாவது ஒரு நாள்
தடுமாறி நின்றுவிட்டால்
என்னாகுமோ
உயிர்கள்
விண்ணேகுமோ?

சூரிய தெருக்களில்
வெவ்வேறு உருக்களில்
தம் வழி செல்லும்
கிரகப் பேருந்துகள்
அருகோடு சென்றாலும்
மாறிட முடியுமோ
வேறிடம் தேடி
தாவி ஏறிட முடியுமோ?

இந்தப் பிறவியில்
இதுவே எம் உலகம்
இடையூறின்றி
பூமியின் பயணத்தில்
ஒவ்வொரு நொடியும்
இன்பமாய் இணைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோக கல்யாண வைபோக வாழ்த்து

ஆதியொடு அந்தமாய் அழியாப் பரம்பொருளாய்
சோதியாய் எங்கும் சுடரும் இறையே
பாதியாய் தோன்றி இத்தேதியில் பூமியில்
சோதியாய் மீண்டும் இணைந்த இறையே
பகவானே, பகவதியே
இல்லறமெனும் உயர் உன்னத உறவினை
தன்மண நாள்தனில் தரணியில் உணர்த்திடும்
பொன் மலர்த் தாள் தொழ வரமழை பொழிந்திடும்
லோக கல்யாண வைபோகமே

மாதவம் செய் மலர்களெல்லாம் மாதவனை அலங்கரிக்க
வானகமே தரையிறங்கி வந்ததுபோல் அகம் நினைக்க
நாத ஒலி பரவ மங்கள நாண் புனைந்து
வேதநாயகன் மணம்புரி காட்சி கண்டு
கண்கள் பனித்தலும் ஆனந்தமே உயிர
தன்னை மறத்தலும் ஆனந்தமே-இசை
வெள்ளம் இனிக்க இமை மூட மறுக்கும்
கரம் தன்னால் குவியும் அருள் இந்நாள் நிறையும்
எழில் லோக கல்யாண வைபோகமே

சொற்களில் அடங்காத அற்புத ரூபனின்
பொற்பதங்களில் பற்றையாய் முளைத்த
முட்பதர்களாய் நாமிருந்தோம்
மற்றவர் உணர்வினை தூற்றித்திரிந்து
நற்றவ வாழ்வினில் நாட்டமிழந்து
பெற்றவர் பெருமையை போற்ற மறந்து
தோற்றது ஏன் என வாட்டமடைந்து
தேற்றவும் ஆளின்றி சாயவும் தோளின்றி
நித்தமும் பூமியில் கலங்கி அலைந்தோம்.

முற்பிறவிச் செய் பயனது சிரம்விழ
முக்தீஸ்வரரின் அருட்கரமது கண்டோம்
உயிர் மூச்சொடு மந்திரம் ஒன்று கலந்தது
அக்கணமே எமை சூழ் இருள் சென்றது
நித்தம் நிகழ்வது அற்புதமானது
சுமந்த சுமைகள் சுகமாய் தெரிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லோகா கல்யாண வைபோக வாழ்த்து

துன்பம் இனித்து உறவு நிலைத்தது
ஒவ்வொரு நொடியுமானந்தம் நிறைந்தது
இத்தனையும் இப்பிறவியில் தந்த
ஸ்ரீ பகவான் கல்யாண வைபோகமே


எம்மையே பூஜிக்கும் தத்துவமும்
இயற்கையை நேசிக்கும் பக்குவமும்
இறைவனோடிணைந்திடும் ஐக்கியம்
முக்திக்கு வித்து ஏகத்துவமும்
சொத்தென இன்றொடு எம்மதி சேரும்
சுற்றிய துர்பலன்கள் இன்று வேகும்
சத்திய யுகத்திற்கெமை தினம் ஏகும்
சக்தியின் கரம் பரத்துடன் சேரும்
லோக கல்யாண வைபோகமே

அசையாத அன்பும் ஆனந்த வாழ்வும்
அழியாத கல்வியும் அளவான செல்வமும்
ஆன்மாவின் முக்தியை அறிவிக்கும் பாதையும்
அவதார மகிமையால் எம் கரம் சேர்த்த
ஸ்ரீ பகவானே பத்மாவதி அன்னையே
நாவில் இனித்திடும் நின் நாமத்தேன் வாழ்க
தேவை அறிந்தெம் குறைதீர்க்கும் கரம் வாழ்க
சேவையில் சிறந்த பல்கலைக்கழகம் வாழ்க
சேனையாய் இணைந்த தாசர்கள் வாழ்க.

உயரிய சங்கல்பம் வாழ்க
தன்னலமில்லாமல் தியான நிலையில்
மண் நலம் காக்கும் நின் கருணை வாழ்க
பொன் மாநகரம் பொலிவுடன் வாழ்க
பல்லாயிரம் யுகம் நின் குலமது வாழ்க
லோக கல்யாண வைபோக நிகழ்வுகள்
பலநூற்றாண்டுகள் கடந்து தொடர்ந்திட
பகவதி சமேத ஸ்ரீ பகவான் பரப்பிரம்மம்
தரணியில் நீடூழி வாழ்க வாழ்கவே.

ஸ்ரீ கல்கி பகவானின் லோக கல்யான வைபவத்தில்
மணமக்களை வாழ்த்தி எழுதிய வாழ்த்துக் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரச் சேமிப்பில்
சிறிதெடுத்து
என் தவத்திற்கு ஒதுக்கிய
அனைவருக்கும்
என்
உளம் நிறைந்த
**நன்றிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By :-
**Raj Praveen Printers**
98A, Vivekananda Hill
Colombo - 13.
Tel : 2344045, 0785-119348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரம் தவமிருந்து ஒளி வரம் பெறும்
மகிழ்ந்து மடி சுரந்து கனி வர தரும்
மலை தவமிருக்க மரம் குடை தரும்
மண்ணில் மழைவர உயிர் பயனுறும்

மனம் தவமிருக்க விரல் உயிர் பெறும்
வியந்து உலகு பார்த்து கவி மழை கோரும்
குவித்த கவித்துளி நின் கரம் சேரும்
நயந்து நனைந்தால் என் விரல் பெறும் வரம்

- தஷந்தி நிரேகா பிரவின் சங்கர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org